தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு — அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஐப்பசி 20 (5-11-'60). சனிக்கிழமை | இதழ் 21

நான் கண்ணீர் விட்டு வெகுநாளாகிவிட்டது.

இப்பொழுது கொஞ்ச நெரமாவது கண்ணீர்விட வேண்டும்போல் தோன்றுகிறது.

கண்ணீர் விடுவது எவ்வளவு சுகமாக இருக்கிறது!

ஓர் அழகியின் இரண்டு கண்களையும் கன்னத்தையும் வருடுவதுபோலும், அவளது பவள உதடு முத்தமிடுவது போலவும் கண்ணீர் சொல்லமுடியாத சுகத்தைக் காட்டுகிறது.

சிரிப்பதைப் பத்து நண்பர்களுக்கு நடுவிலே சிரிக்கலாம். ஆனால். அழும்போது தனியாகத்தான் அழவேண்டும்.

எவ்வளவு நேரம் முடிகிறதோ அவ்வளவு நேரம்.

எவ்வளவு கண்ணீர் வருகிறதோ அவ்வளவும் வரட்டும்.

நன்கு மழை பெய்து ஓய்ந்த பிற்பாடு மண்ணிலும் விண்ணிலும் ஏற்படுகிற தெளிவு கண்ணீர் முடிந்ததும் இதயத்திலே ஏற்படுகிறது.

அமைதி!

சிறிதும் சலனமற்ற அமைதி!

இன்பதுன்பங்களைப் பிரித்துரைக்க முடியாத அமைதி!

துன்பம் மண்ணாக இருந்தாலும் மலையாக இருந்தாலும் கண்ணீர் அதைக் கரைத்துவிடுகிறது.

கண்ணீர் விடத்தெரியாதவன் மனிதனா?

இரக்கமும் அன்பும் பாசமும் எங்கே நிறைந்திருக்கின்றனவோ, எந்த உடம்பில் நிறைந்திருக்கின்றனவோ, அந்த உடம்பில் கண்ணீர் கண்களுக்குப் பக்கத்திலேயே நிற்கிறது.

அவல ஒலி கேட்டால் மளமளவென்று கொட்டுகிறது.

சிறு சிறு துன்பங்களிலேயும் அது கட்டுப்பாடற்று ஓடிவருகிறது.

ஆனால், ஒவ்வொரு துன்பத்தையும் அது கரைத்துவிடுகிறது.

ஒருவகையான இளஞ்சூடு கண்ணீரிலே இருக்கிறது

அது எப்போதுமே குளிர்ச்சியாய் இருப்பதில்லை.

நினைவுகளாலே இதயத்தில் சூடேறுவதுபோல் கண்ணீரிலும் சூடேறுகிறது.

அதனால்,

கண்ணீர் வெறும் தண்ணீரின் ஒரு பகுதியல்ல.

அது ஒரு மாயப்பொருள்!

சரித்திரத்தின் பல பகுதிகளுக்கு அது காரணமாயிருந்திருக்கிறது.

சமுதாயத்தைப் பலமுறை அது மாற்றி அமைத்திருக்கிறது.

காலங்களாலே மாறிவந்த நாகரிகங்களுக்கு கண்ணீர் பொறுப்பாளியாயிருக்கிறது.

சில மதங்களை அது இருந்த இடம் தெரியாமல் அழித்திருக்கிறது.

சில மதங்களை அது சுறுசுறுப்பாக வளர்த்திருக்கிறது.

கிருத்தவ மதத்தின் வளர்ச்சிக்கு ஏசுநாதரின் கண்ணீர் காரணம்.

ரஷ்யாவில் பொதுவுடைமை ஆட்சி மலர்ந்ததற்கு ஜார்மன்னன் காலத்தில் மக்கள் வடித்த கண்ணீர் காரணம்.

ஒவ்வொரு கண்ணீரும் ஒவ்வொரு வகையில் காலத்தை மாற்றியிருக்கிறது.



கண்ணீரிலே வெளிச்சம் பிறக்கிறது!

கண்ணீரிலே உறவு இறுகப் பிணைக்கப்படுகிறது!

கண்ணீரிலே தொடர்பு அறுபட்டும் போகிறது.

இயற்கையாக வரும் துன்பத்தில் தானா கண்ணீர் வருகிறது? சிலர் திட்டமிட்டுக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

நாளை மூன்று மணிக்குப் போய் அழலாம் என்றிருக்கிறேன் என்று சொல்லிவிட்டே போய் அழுகிறார்கள்.

நாட்டு வறுமைக்கு யார் காரணமாய் இருக்கிறானோ அவனே ஐயோ! நாடு வறுமையில் வீழ்ந்துவிட்டதே யென்று கண்ணீர் வடிக்கிறான்.

காரியம் சாதிக்கக் கண்ணீர் வடிப்பதில் பல கீண் மணிகள் கண்ணீர் மணிகளாக அமைகிறார்கள்.

கண்ணீரில் பலவகை—

போலிக் கண்ணீர்!
நீலிக் கண்ணீர்!
முதலைக் கண்ணீர்!
ஆனந்தக் கண்ணீர்!
துயரக் கண்ணீர்!
காரியம் ஒன்று-நாடகம் நான்கு!

முதலையின் தண்ணீரை நான் பார்த்ததில்லை ஆனால் தேர்தல் காலத்து மனித முதலைகளின் கண்ணீரைப் பார்த்திருக்கிறேன்,

அவர்கள் அதிசயமான மனிதர்கள்.

எங்கே தான் குடியிருக்குமோ அவ்வளவு கண்ணீர்?

பூச்சரம்போல் உதிர்ந்து கொண்டேயிருக்கிறது!

இலக்கியக் காரர்கள் கெட்டார்கள் போங்கள்.

இயற்கைக் கண்ணீரைப் பற்றித் தான் அவர்கள் பாடிவிட்டுப் போயிருக்கிறார்கள்,

ஆனால், செயற்கைக் கண்ணீர்தான் நம் கண்ணுக்கு அதிகமாகத் தெரிகிறது!

உலகம் வெறும் நாடக மேடையாக மாறிக் கொண்டு வருகிறது.

காலம் காட்சிகளை மாற்றும் திரைச்சீலையாகிறது!

மனிதர்கள் எல்லோருமே நன்றாக நடிக்கக் கற்றுக் கொண்டு விட்டார்கள்.

அந்த நடிப்பை உணமையென்று நம்பவைப்பதற்குக் கண்ணீர் பயன்படுகிறது.

கண்ணீர் கண்களில் மட்டுமே வருகிறது.

அதை எப்படியும் வரவழைத்துக் கொள்ள முடிகிறது!

அதனால், உண்மைக்கும் பொய்க்கும் பேதம் தெரிவதில்லை.

உண்மையான கண்ணீர் உடம்பின் ஒவ்வொரு மயிர்க்காலிலும் வரும் என்று இயற்கை யுணர்ச்சி மாறக்கூடாதா?

அப்படி மாறினால்,

வாழ்க்கை நாடக நடிகர்கள் பலருக்குப் பிழைப்புப் போய்விடும்!

உண்மைக்கும் பொய்க்கும் பேதம் தெரிந்துவிடும்!

எந்தக் கண்ணீருக்கும் சரியான பதில் கிடைக்கும்!

அந்தப் பெர்மிட் செய்கிற வேலை!

"ஐயா! வாங்க-வாங்க!"

"ஆமாங்க!"

"சௌக்கியமா?"

"உங்கள் புண்ணியத்தில் ஒன்றும் குறைவில்லை!"

"நல்லது! உட்காருங்க-வெற்றிலை போடுங்க"

"மன்னிச்சுக்கொங்க - அதெல்லாம் போடுறதில்லைங்க"

"வந்த காரியம் என்னவோ?"

"ஒண்ணுமில்லை - நேத்து கூட்டம் பார்க்கப் போனிங்களான்னு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்"

"எந்தக் கூட்டம்? அண்ணாத்துரை கூட்டத்தையா?"

"ஆமாங்க. பிச்செடுத்திட்டாருங்க-மனுசன் என்னமாப் பேசுறாருங்க!"

"நான் இவங்க கூட்டங்களுக்கெல்லாம் போறதில்லை-என்ன சொன்னாரு?"

"என்ன சொல்ருரு? 3-வது அஞ்சாண்டுத் திட்டத்திலே தென்னாட்டுக்கு ஒண்ணுமில்லாம பட்டை நாமம் போட்டுட்டாங்க, வட நாட்டானுங்க. முதல் திட்டத்திலேயும் 2-வது திட்டத்திலேயும், இப்பிடித்தான் நாமம் போட்டாங்க. இங்கே கையாலாகாத மந்திரிங்க இருக்காங்க. இவங்களையெல்லாம் 1962 தேர்தல்லே வீட்டுக்கு அனுப்பிச்சடணும் அப்படின்னு பேசனாரு!"

"கூட்டம் எவ்வளவு இருக்கும்?"

"கூட்டம் பெரிசாத்தான் இருந்துச்சுங்க-ஒரு லட்சம் இருக்குமிண்ணுங்க!"

"அட என்னய்யா! நம்ம சவகர்லாலு வந்தன்னைக்கே ஒருலட்சத்துக்கு உள்ளறத்தான் இருக்கும்! இவருக்குமா அத்தனை கூட்டம்?"

"ஆமாங்க, சவகர்லாலு வந்தன்னைக்கு போலீசுதானுங்களே பாதிப்பேரு! நேத்து பட்டிக் காட்டுலே இருந்தெல்லாம் வந்திட்டாங்களே-சைக்கிள்லே ஏறிக்கிட்டு!"

"அண்ணாத்துரை கூட சினிமாக்காரன் எவனுச்சும் வந்திருந்தானே?"

"அப்பிடி ஒருத்தரும் வரல்லிங்க!"

"சரி! அப்பறம் என்ன பேசினாரு?"

"அப்பறம் என்ன? காங்கிரசு, வட நாட்டானோடை கையாட்கள் கூட்டம். பணக்காரன் ஆலைமுதலாளி, பஸ் முதலாளி, லைசென்ஸ், பெர்மிட் வாங்கிறவங்க-இப்பிடிப்பட்டவங்களெல்லாம் காங்கிரசிலே சேர்ந்துக்கிண்டு-அவனவன் சுயநலத்துக்காக நாட்டைக் கெடுத்துக் கிட்டிருக்காங்க. அதுனாலே இந்தக் கூட்டத்தையே ஆட்சியிலிருந்து விரட்டியாகணும். அதோடே திராவிட நாடு வாங்குறதுக்கு எல்லாரும் தயாராகணும் அப்பிடிண்ணாரு!"

"வேறே என்ன சொன்னாரு?"

"வேறே என்ன? காங்கிரசு சுயராஜ்யம் வாங்கியது வடநாட்டானுக்குத்தான்-நமக்கு இல்லே! நாமெல்லாம் வட நாட்டானுக்கு அடிமையா இருக்குறோம். அதுனாலே, நம்ம நாட்டுலே ஏழை எளியவங்க பொழைக்க முடியாம சாகுறாங்க! இந்த நெலமை மாறணுமின்னா அதுக்கு-திராவிடநாடு வாங்கிறதான் வழி! அப்பிடிண்ணாரு"

"அவரு பிரசங்கம் முடிஞ்ச பிறகு ஜனங்க என்ன பேசுறாங்க?"

"அவரு சொல்றதும் நாயமாத்தான் இருக்குன்னு பேசுறாங்க!"

"என்னய்யா நாயத்தைக் கண்டுட்டீங்க? இந்த அண்ணாத்துரை கூட்டம் யாருண்ணு தெரியுமாய்யா? காங்கிரசு, அந்தக் காலத்திலே வெள்ளைக் காரனோடே போராடிக்கிட்டிருந்த போது, இவங்க ஜஸ்டிஸ் கட்சின்னு வச்சுக் கிட்டு, வெள்ளைக் காரனோட பூட்சைத் தொடச்சுக்கிட்டிருந்தாங்கய்யா! தெரியுமிலே?"

"ஐயய்ய-அதையும் சொன்னாருங்களே-இப்படி எல்லாம் காங்கிரசுக்காரங்க பேசுறாங்க. ஆனால், பூட்சு தொடச்சவங்களெல்லாம், இப்போ எங்ககிட்ட இல்லே. ராசா சர் முத்தையாச் செட்டியாரு, மாணிக்கவேலு நாய்க்கரு, டாக்டர் சுப்பராயன் இவங்கதான் ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்தவங்க. இப்போ இவங்கயெல்லாம் காங்கிரசுலே ஐக்கியமாகிட்டாங்க போதாக் குறைக்குப் பெரியார் ராமசாமியும், இப்போ காங்கிரசுக்கு பக்கபலமாத்தான் நிக்கிறாரு! அதுனாலே. நாங்க பூட்சு தொடச்சோமின்னு சொல்றது முழுப்பித்தலாட்டம் அப்பிடிங்கருரே! நாயமாத்தானே இருக்கு?"

"அது சரிய்யா! அவங்களெல்லாம் நல்லபுத்திவந்து காங்கிரசுலே சேர்ந்திருக்காங்க. பெரியாரே திராவிட நாடு வேண்டாமின்னு சொல்லிப் பிட்டாரே; இவங்க ஏன்யா அதைக் கட்டிக் கிட்டு அழுருன்?"

"அதையும் சொன்னாருங்க! பெரியார் வேண்டாமிண்ணுட்டாருன்னு சொல்ருங்க. பெரியாருக்காக ஒரு கட்சி இருப்பதில்லே. அந்தக்காலத்திலே ராசகோபாலாச்சாரி காங்கிரசுலே இருந்து பாடுபட்டாரு. இப்போ அதை ஒழிச்சுட்டுதான் படுப்பேன்கிறாரு. நாங்க ராசகோபாலாச்சாரி மாதிரி எல்லாக் காங்கிரசுக் காரனும் வரணுமிண்ணு சொல்றோம் அப்படிண்ணு கேட்டாருங்க"

"சரி தொலையட்டும்! சுயராஜ்யம் வாங்கிறதுக்காக எவனய்யா பாடுபட்டான்;—காங்கிரசுக்காரன் தானேய்யா? பாடுபட்டான்—பலன் அனுபவிக்கிருன்! இவங்க யாருய்யா அதைக் கேட்க?"

"அண்ணாத்துரை அதுக்கும் சொன்னாரு! சுயராஜ்யம் காங்கிரசுக் காரனுக்கு மட்டும் பாத்தியப் பட்டதில்லே. அப்படிப் பாத்தியமிண்ணு எங்க கட்சிக்காரன் காங்கிரசை எதிர்கிற மற்றக் கட்சிக் காரன் கிட்டே எல்லாம்-வரி வாங்கக் கூடாது அதுதான் முறை! வரிவாங்கிருன்; சுயராஜ்யமிண்ணு எங்க பாட்டன் சொத்துங்கிருன்; நாயமாண்ணு கேட்கிறாருங்களே!"

"கேட்பாரு! கேட்பாரு! அரசாங்கம் செய்யப் போனவன் வரிவாங்காம விடுவான்-இவரு ஐயாப் போல வக்கணை பேசிக்கிட்டிருப்பாரு?"

"ஐயையோ - அவரு வரி வாங்க வேண்டாமிண்ணு சொல்லலையே! சுயராஜ்யமிண்ணு தங்களுக்கும் பாத்தியமிருக்குங்கிறதுக்கு இணைதானுங்க சொன்னாரு!"

"ஏய்யா! நீங்களே இந்த அண்ணாத்துரை பிரசங்கத்தைக் கேட்டுப் பிட்டு ரொம்ப மாறிப்போயிட்டிங்க போலப் பேசுறங்க! அப்படித்தானே?"

"இல்லைங்க-அவரு பேச்சை மறுக்க முடியலைங்கிறதைத் தானே சொல்லிக்கிட்டு வந்தேன்- அதும் நீங்க கேட்டதுனாலே!"

"என்ன சொல்லிக்கிட்டு வந்தீங்க? அண்ணாத்துரைக்குப் பதிலா நீங்களே வாதாடுறிங்களா- சொல்லுறிங்களா?"

"நீங்க துருவி துருவிக் கேட்டிங்க நான் சொன்னேன்! வேறென்ன சொன்னேன்?"

"என்ன சொன்னிங்கன்னு நான் ஒரு தரம் சொல்லணுமா? நீங்க சொல்லிக்கிட்டு வரும்போதே அண்ணாத்துரையை ஆதரிக்கிற மாதிரிதான்யா இருந்தது!"

"ஜனங்க ஆதரவாத்தானே பேசுறாங்க! நீங்க அதைக் கேட்டிங்க சொன்னேன்! இப்போ கோபப்படுறிங்க!"

"கோபமில்லாம-ஒங்களைப் போல பிரசங்கம் கேட்டுட்டு நாயமாத்தான் இருக்குண்ணு சொல்லச் சொல்றிங்களா?"

"சரி! நீங்க என்ன சொல்றிங்க! சொல்லுங்க கேட்டுக்கிறேன்!"

"அப்படிக் கேளுங்க - உண்கிற சோத்துலே மண்ணள்ளிப் போட்டுக்காதங்க! எதிர்க்கட்சிக் காரன் எல்லாரும் இப்படித்தான்யாபேசுவான். அதுக்காக நாம்பளே மயங்கிடப் படாது. அதெல்லாம் கிடையாதுண்ணு காமராசு மாதிரி அடிச்சுப் பேசணுங்க"

"அடிச்சுப் பேசுனா ஜனங்க நம்ப வேண்டாங்களா? காமராசு ஆயிரம் பேரு போலீசுக்காரனை சுத்தி நிக்க வச்சுட்டுப் பேசுறாரு! சும்மா பேசிப் பார்த்தாத் தெரியுங்க!"

"ஏன்யா யாரு என்ன செஞ்சிட முடியும்?"

"ஒவ்வொருத்தனும் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாதுங்க! அப்பிடிக் கேட்கிருங்க!"

"அப்படி என்ன கேட்கிருன்?"

"என்ன கேட்கிருன்! காங்கிரசு ஆட்சி வந்த பிறகுதான் கள்ளத் தோணிலே போய் கடலிலே சாகிருங்க-பெண்டாட்டி பிள்ளைங்களோட கிணத்திலே விழுந்து சாகிருங்க-என்கிருங்களே-என்ன சொல்லறது?"

"அதெல்லாம் அவனவன் சாதகப் பலன்! தலைவிதி! அதுக்கு காங்கிரசு என்னய்யா செய்யும்?"

"தலை விதின்னு தமிழனுக்குமட்டும் தானு? கடலில் செத்தவன்லே ஒருத்தன்கூட வடநாட்டான் இல்லையே என்கிருங்களே!"

"வட நாட்டுலே பிரம்ம புத்திராவும் கங்கையும் வெள்ளக்காடாகி நூற்றுக் கணக்காச் சாகலையா?"

"வெள்ளம் வந்து சாகிறதுக்கும் பொழைக்கமுடியாமப் போயி சாகிறதுக்கும்; வித்தியாசம் இல்லையான்னு கேட்டா என்ன செய்யறது?"

"எப்பிடியாவது சாகிருந இல்லையா? அதெல்லாம் சாதகப் பலன்தானே! சாதகமாவது ஜோசியமாவதுண்ணு சொன்னுங்கன்னு நாத்திகப் பயல்கன்னு சொல்லிடப் போறோம்! வேறென்ன?"

"சரி, இங்கே மட்டும் தொழில் கிடையாம பஞ்சம் வளருதேன்கிருன் அதுக்கு என்ன சொல்றது?"

"அதுக்குத்தான் காமராசு சொன்னாரு! முவேந்தர் ஆண்ட காலத்திலேயே பஞ்சம் இருந்தது—நல்லதங்காள் கிணத்திலே பிள்ளைகளைப் போட்டுச் சாகலையா? இதெல்லாம் சகசந்தான் அப்பிடின்னு சொன்னாரா இல்லையா?"

"நல்லதங்கா காலத்திலே விஞ்ஞானமில்லே-போக்கு வரத்தில்லே! அதுனாலே அந்தக் காலத்திலே எல்லா நாட்டிலேயும் மழை தண்ணியில்லேன்ன பஞ்சம் வந்தது. இந்தக் காலத்திலே இங்கே தவற எங்கேயுமே இப்பிடிப் பஞ்சம் இல்லேங்கிருங்களே! இலங்கையைப் பாரு! பர்மாவைப் பாரு! வடநாட்டைப் பாரு! அங்கேயெல்லாம் இப்பிடிப் பஞ்சம் கிடையாதுண்ணு அடுக்குருங்களே!"

"என்னத்தையா அடுக்கிருன்? சொல்ற வேலையைச் செய்யமாட்டேங்கிருன்! இந்தாப் பாருங்க-எல்லாரும் கைராட்டை நூற்கணும்-கதர் உடுத்தணுமின்னு-காந்தியே சொன்னாரே! கேட்கிருங்களா? பஞ்சம் வராம என்ன செய்யும்!

"ஆமா! இப்போது நூற்று நெய்கிற கதருக்கே 33 சத வீதம் கழிவு கொடுத்தாலும் விற்க முடியல்லே! எல்லாரும் நூற்று நெய்தா-அவ்வளவுதான்! கதர் நூலையாவது வேட்டியையாவது சாப்பிட்டுட்டுத் திரிய வேண்டியதுதான்! அதோட வடநாட்டிலே நெசவாலை-இங்கே கைராட்டையான்னு கேட்கிருங்க! இப்ப நூற்கிறவங்கதான் என்ன வாழுருன். ஒரு நாளைக்கு எட்டணாகூடக் கூலி இல்லை. பொழைக்க முடியுமான்னு கேட்கிருங்களே!"

"ஏன் அண்ணாத்துரையும் அவங்க கூட்டமும் தேவையான மில்லுகளை ஏற்படுத்தட்டுமே! யாரு வேண்டாமிங்கிரு?"

"அதுக்குத்தான், காங்கிரசை ஒழிக்கணும், திராவிட நாடு வாங்கணும், அப்பத்தான் தொழில் வளம் பெருக்க முடியும் என்கிருங்க!"

"திராவிட நாடு வந்திட்டா எல்லாம் பண்ணிப் பிடுவாரோ? எவன்நாட்டைப் பிரிக்க விடுவான்? அப்படியே பிரிச்சாலும் இவங்களுக்கு எந்தநாடு உதவி செய்யும்? ஒரே இந்தியாங்கிறதாலே இப்போ பெரிய பெரிய வல்லரசெல்லாம் கோடி கோடியாக் குடுத்து உதவி செய்யிருங்க பிரிச்சா யாரு தருவா?"

"அந்தக்கவலை ஒங்களுக்கு வேண்டாம்! ஒருகோடி ஒண்ணரைக் கோடி ஜனத்தொகையுள்ள ஆப்பிரிக்கக் காட்டு மிராண்டி நாடுகளுக்கே உதவி செய்யறதுக்கு அமெரிக்கா ஒருபக்கம்-ரசியா ஒருபக்கமா-நான் நீயின்னு, போட்டி போட்டுக்கின்னு திரியுது. அதுக்கு மேலே திராவிடம் மோசமான நாடில்லே என்கிருங்களே!"

"திராவிடநாடு வாங்கிண்டு அது மாதிரி போனுங்கன்னு இந்த நாட்டை அமெரிக்கா ரசியாமாதிரி ஒரு நாட்டுக்கு அடிமையாக்கி விட்டுவிட்டு இருப்பாங்க வேறென்ன?"

"இப்போ ஒரே இந்தியாவா இருந்து கடன் வாங்கினுமட்டும் அடிமையாகாதுங்களா?"

"யோவ்! நான் அப்பவே இருந்து கவனிச்சுக்கிட்டிருக்கென். உங்களுக்கு அண்ணாத்துரை போட்ட சொக்குப் பொடிலே, தலையே சுத்தற மாதிரி இருக்கு! நீங்க பிள்ளைக்குட்டிக்கார மனுசன்; ஏதோ போன வருசம் காங்கிரசுக்கே வந்தேங்க! அதுக்காக ஒங்களுக்கு இரும்புக்கும் சாய மருந்துக்கும் பெரமிட்டு வாங்கி, அரியலூரார் உதவி செய்தாரு! நல்ல கஞ்சி குடிச்சுக்கிட்டிருக்கிங்க! நீங்க இப்பிடி ஒருமாதிரியா இருக்கிறிங்கன்னு அவருக்கு சேதி தெரிஞ்சுதோ- ஒங்க பொழைப்பிலே-அன்னைக்கே மண்ணு விழுந்திடும். உசாராயிருங்க! எவன் என்ன பேசினு என்னய்யா-முக்காத்துட்டுக்கு வழி செய்திடுவானு? போய் வேலையைப் பாருங்க நேரமாகுது!"

"ஐயய்யே நீங்க என்னையே சந்தேகப்படுறிங்களே! நாட்டிலே ஜனங்க பேசறதைத்தானே சொன்னேன்! நான் ஒரு மாதிரியாகிறதுக்குப் பைத்தியமா பிடிச்சுருக்கு?"

"ஜனங்களுக்கு என்னய்யா வேலை! தேர்தல் அப்போ ஆளுக்கு 2 ரூபாய் கொடுத்தா "காங்கிரசுக்கு ஜே!ஜே!ன்னு ஓட்டுப் போடுவாங்க" அண்ணாத்துரையைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாங்க! தெரிஞ்சுதா? பேசியிட்டு வாங்க நாளைக்குப் பேசுவோம்"

அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 5-11-'60 | இதழ் 21

கோதுமைப் புத்தி!

"மெத்தப் படித்தவனுக்குப் புத்தி மட்டு" என்று ஒரு பழமொழி இருக்கிறது, அது இப்போது யாருக்குப் பொருந்தும் என்றால் பண்டிதர் நேருவுக்குத்தான் பொருந்தும்.

நேரு பண்டிதர் தாம் ஆட்சிக்கு வந்த பிறகு செய்து வருகிற ஒவ்வொரு செயலையும் பார்த்தால் அவருக்கு வர வர அறிவு மழுங்கி வருகிறதென்பது தெளிவாகத் தெரியும்.

அவருடைய சிந்தனை சக்தி எப்படி யெப்படியோ வேலை செய்கிறது. எதிர்பாராத முடிவுகளையெல்லாம் வெளிப் படுத்துகிறது!

உலக வல்லரசுகளுக்கு அவர் ஒரு 'தபால்சேவக'னாக வேலைபார்த்து வந்தார் இதைக் காங்கிரஸ் ஏடுகள் மூடி மறைத்து அவரால் தான் உலக சமாதானமே காப்பாற்றப் படுகிறது என்று போலிப் பரணி பாடிக் கொண்டிருந்தன.

அண்மையில் நடந்த ஐ நா. சபைக் கூட்ட நிகழ்ச்சிகள், அவருடைய வெற்றுப் புகழுக்கு முற்றுப் புள்ளி வைத்ததோடு நில்லாமல். அவரை அவமரியாதைக்குரிய வராகவும் ஆக்கிவிட்டன.

எப்பொழுதும் அகில உலகப் பிரச்சினைகளிலேயே தம் நேரத்தைச் செலவழிக்கின்ற நேரு இப்போது உள்நாட்டு பிரச்சினைகளில் கூடத் தம் சிந்தனையையும் நேரத்தையும் செலவழிக்கத் திருப்பியிருக்கிறார் அதிலும் மக்கள் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தம் அருமையான நேரத்தைச் செலவழித் திருக்கிறார்.

"மக்கள் பிரச்சினைகளிலே தான் நேருவுக்கு எத்தனை அக்கரை" என்றுதான் நமக்கு நினைக்கத் தோன்றும்.

ஆனால், நேருவோ. அவருடைய அரசாங்கமோ மக்கள் பிரச்சினைகளை நினைக்கத் துவங்குப்போதெல்லாம், மக்களுக்கு அரசாங்கத்திடம் அன்பும் ஆதரவும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஆத்திரமும் கோபமுமே ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது அவர்கள் போக்கு.

மக்கள் உணவுப் பிரச்சினை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது! இதைத் தீர்ப்பதற்கு என்னென்ன வழிகள் என்று ஆராய வேண்டிய நேரு அரசாங்கத்தினர் கையாளுகின்ற முறைகள்தான் நகைப்பிற்குரியனவாக மட்டுமல்ல நடுக்கத்திற்குரியனவாகவுமிருக்கின்றன.

நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் உணவு உற்பத்தி பெருகவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வழிகளை யோசிக்க வேண்டியதும், அதற்காகத் திட்டம் தீட்டுவதும் செலவழிக்க வேண்டியதும் தான், யோக்கியமான அல்லது புத்தியுள்ள ஓர் அரசாங்கம் செய்யக் கூடிய செயலாகும். அதை விட்டுவிட்டு, மக்கள் தொகையையே குறைப்பதற்கு வழி என்ன என்று ஆலோசித்தும் திட்டம் வகுத்தும் செயலாற்றியும் வருகின்ற இந்த அரசாங்கம், மக்களை ஆள யோக்கியதையுடையதுமல்ல; புத்தியுடையதுமல்ல!

இப்போது நாட்டிலே அரிசி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அரிசி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றால், அரிசி உற்பத்தியைப் பெருக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுவதுதான் பொருத்தமான செயல். அதற்கான நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கும். உரங்களைத் தயாரித்து வழங்குவதற்கும். நிலங்களின் பரப்புகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அரிசி விளையும் இடம் தென்னகமாக இருப்பதால் அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு தென்னகத்தில் வளமும் வாழ்வும் ஏற்படும்படி செய்ய நேருவுக்கும் அவர் பின்னணியிலிருக்கும் வடவருக்கும் எண்ணம் தோன்றும் என்று நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும்?

தமிழ்நாட்டிலும், பிறமொழிகள் வழங்கும் மாநிலங்களிலும், தமிழ்மொழியும் அவ்வம்மாநிலத்து மொழியும் பேசினால் ஒற்றுமை குறையும்-இந்தி பேசுவதால் தான் ஒற்றுமை வளரும் ஆகையால் இந்தி ஆட்சிமொழியாக வேண்டும் என்ற புதுக்கருத்தைப் பரப்புகின்ற வடவர் தலைவர் நேரு இப்போது, உணவுப் பிரச்சினையிலும் கூட இந்தித் திணிப்பு போன்ற ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்.

"அரிசிச் சோறு சாப்பிட்டால் சோம்பல் ஏற்படுமாம்!" இது நேரு பண்டிதரின் திருவாய்மொழி. வடவரின் காலை நத்திப் பிழைப்பவர்கள் இதைத் தினந்தோறும் பாராயணம் செய்து வரலாம். உலகில் நாகரிகம் ஏற்பட்ட காலத்திலிருந்து காய் கிழங்குகளையும் காட்டு மிருகங்களையும் உணவுப் பொருளாகக் கொண்டிருந்த காட்டுமிராண்டிக் காலம் போய் உயர்ந்த நாகரிகம் ஏற்பட்ட அந்தத் தலைநாளிலிருந்து மனிதன் உண்டுவருகிற அரிசிச் சோறு பற்றி இப்போது புத்தம் புதிதாக நேருபண்டிதர் புத்தி கெட்ட முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

நாட்டுப் புறங்களிலேயிருக்கும் கல்வி அறிவில்லாத பெண்கள், பன்ரொட்டி சாப்பிடுபவர்களைப் பார்த்து, "சீக்காளி சாப்பாடு சாப்பிடுகிறான்" என்று சொல்லுவதை நாம் கேட்டிருக்கிறோம். நாட்டை யாளவந்த நேரு, "அரிசிச் சோறு சாப்பிட்டால் சோம்பல் வரும்' என்று சொன்னால், அவர் அந்தப் பட்டிக் காட்டுப் பெண்களைவிடக் கெட்டிக்காரர் என்று நாம் நினைக்கமுடியும்.

நாட்டிலே நிலவுகின்ற உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையென்றால், மானமுள்ளவர்களாக இருந்தால், ஆட்சி பீடத்திலிருந்து இறங்கிவிட வேண்டும், இந்த நேரு கூட்டத்தினர். அதை விட்டுவிட்டு அறிவு கெட்டதனமாக அதையும் இதையும் உளறிக்கொண்டிருந்தால், வலுக்கட்டாயமாக அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதில் சிறிதும் ஐயத்திற்கிடமில்லை.

கையாலாகாத இந்த நேரு கூட்டத்தினரின் ஆட்சிக்கு இறுதி நாள் வந்து கொண்டிருக்கிறது. ஆம் 1962-தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. மக்கள் அப்போது இந்த யோக்கியதையற்றவர்களின் கருத்துக்குமட்டுமல்ல அரசியல் வாழ்க்கைக்கும் ஒரு முடிவு ஏற்படுத்திவிடுவார்கள். இது திண்ணம்!

வெண்பாப் போட்டி-10.

★

ஈற்றடி:

புலிநடுங்கித் தஞ்சம் புகல்

இறுதி நாள் 19-11-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

வெளிவந்து விட்டது

நவம்பர் முல்லை.

கவிதைகள்

நாளைய செல்வம் —கண்ணதாசன்.

பாடுக வண்டே! —நாரா நாச்சியப்பன்.

துணிந்தாள் இல்லை! —தமிழ்ப் பித்தன்.

கதைகள்

சோளக் காட்டு அழகி —எம். எஸ். இராமசாமி.

பிரேத பரிசோதனை —ந. தாமோதரன்.

படிக்காதவள் —பா. தங்கவேலர்.

கட்டுரைகள்

நெப்போலியன் காதல் —நாகநாதன்.

அருமைத் திருக்குறள் —பன்னை. சண்முகம்.

கெண்டை மீன் கொண்ட பயம் —ருக்மணி இராமனுதன்.

இன்னும் பலப்பல!
சிறப்புப் பகுதிகள்!

இத்தனைக்கும் விலை 25 புதுக்காசுகள்

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடியவர்கள் விண்ணப்பிக்க:—

முல்லை சென்னை-6.

மல்லிகைப்

28. ராதாவுக்கு வந்த கடிதம்

தங்கத்தின் எண்ணம் அவள் அறிவின் பிடியிலிருந்து நழுவியது, அது திரும்பத்திரும்ப அந்தப் புதிய இளைஞன் ராஜுவின் மீதே போய்ப் படிந்தது. ஏதோ ஒன்று அவள் உள்ளத்தை அவன் நினைப்பிலேயே சுழன்றுடும்படி செய்து கொண்டிருந்தது.

அத்தான் சுந்தரேசன் மீது அவளுக்குத் தடுக்கமுடியாத ஓர் அன்பு ஏற்பட்டது. அவனும் அவளை விரும்புவதாகக் காட்டிக் கொண்டான். ஆனால், ஒவ்வொரு முறையும் அவனை அவள் எண்ணிய போதும், ஒவ்வொரு முறையும் அவளுடைய உள்ளம் அவன் பால் ஈடுபட்டபோதும் அவனைக் காதலிப்பது தவறு தவறு என்று ஏதோ ஒன்று இடித்துக் கொண்டேயிருந்தது.

நடராசன் அவள் மீது ஆசை கொண்டிருந்தான். அவளும் அவனைக் காதலித்திருப்பாள்! ஆனால், அந்தக் கையில் இருந்த ஊனம் அவளுக்குப் பெருங் குறையாகப் பட்டது. அதுவே அவள் நடராசன் மீது கொண்ட காதலை வளரவிடாமல் தடுத்து நிறுத்தியது.

இப்பொழுதோ அவளுடைய எண்ணம் இந்தப் புதிய இளைஞன் ராஜுவின் மீது படிகிறது. இவனும் கையை இழந்தவன் தான். ஆனால், கையுடனிருக்கும் போதும் இவனை இரண்டொரு முறை தங்கம் பார்த்திருந்தபடியால் அந்த ஊனம் அவளுக்குப் பெரிதாகத் தோன்ற வில்லை. ஆனால், இவன்மீது எப்படி உள்ளம் ஈடுபட்டது என்று எண்ணிப் பார்க்கப் பார்க்க அவளுக்கு விந்தையாகவே யிருந்தது. இவனை முதலில் பார்த்த போதே எங்கோ பார்த்தது போன்ற பிரமை தோன்றுவானேன். இவனைப் பார்த்த போதே இவனுக்கும் தனக்கும் நெடு நாள் தொடர்பிருப்பது போன்ற எண்ணம் ஏற்படுவானேன்? தங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், இந்தக் காதலும் நிறைவேறு மென்ற நம்பிக்கை தங்கத்துக்கில்லை. அந்த ராஜுவும் மலர்க்கொடியும் அவ்வளவு அன்பாகவும்ஆர்வமாகவும்பழகுவதைப் பார்த்த பிறகு, தான் இதில் இடையில் புகுவது நேர்மையாகவோ நியாயமாகவோ, பொருத்தமாகவோ அவளுக்குப் படவில்லை.

இதிலும் ஏமாற்றங் காண நேரிடுவதற்கு முன்னல், தன் உள்ளத்தை அணைபோட்டு அந்தப் பக்கம் திரும்பாதபடி தடுத்து விடவேண்டுமென்று எண்ணினுள்.

ஆனல். எண்ணமோ திரும்பத் திரும்ப ராஜுவையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அன்று இரவு முழுவதும் அவள் சரியாகத் தூங்கவேயில்லை. அதனல், அவள் காலையில் நெடுநேரம் சென்றே எழுந்திருந்தாள். எழுந்தவுடன், ராதாவின் அறைக்குச் சென்றுள் அவளோ, அப்பொழுது, தூங்கிக் கொண்டிருந்தாள். பாவம்! இரவு அவள் உள்ளம் எவ்வளவு தூரம் குழம்பியதோ!

அன்று மாலை நான்கு மணிக்கு, மருத்துவ விடுதியில் போய் அந்த இளைஞனைப் பார்த்து வரலாமா என்று தங்கம் ராதாவைக் கேட்டபோது, அவள் மிகுந்த ஆவலோடு ஒப்புக் கொண்டாள்.

இருவரும் சரியாக முன்றேமுக்கால் மணிக்கு வீட்டைவிட்டுக் கிளம்பி ஒரு வாடகைக்காரை யமர்த்திக்கொண்டு பெரிய மருத்துவ விடுதிக்குச் சென்ருர்கள்.

அங்கே ஏற்கனவே மலர்க்கொடியின் கார் வந்து நிற்பதைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படவில்லை. உள்ளே வார்டில் ராஜு தன் படுக்கையில் கைக்கட்டுடன அமர்ந்து. எதிரில் முக்காலியில் அமர்ந்திருந்த மலர்க்கொடியுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.

தங்கத்தையும் ராதாவையும் கண்டவுடன், ராஜு தங்கத்துடன் மிக அன்பாகப் பேசினுன். அவர்கள் தன்னைச் சரியான சமயத்தில் காப்பாற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டான். ராதாவிடம் அவன் அவ்வளவாகப் பேசவில்லை.

தங்கம் ராஜுவிடம் நிறையப் பேச வேண்டும்; நெடுநேரம் அவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று தான் நினைத்துக் கொண்டு வந்தாள். ஆனல் ஐந்து பத்து நிமிடங்களுக்கு மேல் பேசுவதற்கு விஷயம் அகப்படவில்லை. ஆனல், மலர்க்கொடி மட்டும் அவனுடன் விடாமல் பேசிக் கொண்டிருக்கிருளே? அப்படி என்ன விஷயம் பற்றி இப்படித் தொடர்ந்து பேசிக் கொள்வார்கள் என்று தங்கத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் மூவரும் புறப்பட்டார்கள்.

வெளியில் வந்ததும். "தங்கம் நீங்கள் இரண்டு பேரும் மருத்துவ விடுதிக்கு வருவதாகச் சொல்லவில்லையே, சொல்லியிருந்தால் நானே வந்து கூட்டிக் கொண்டு வந்திருப்பேனே!" என்று கேட்டாள்.

"மலர்க்கொடி. நீ வருவாயென்று எங்களுக்கெப்படித் தெரியும்?" என்று கேட்டாள் ராதா.

உடனே மலர்க்கொடியின் முகம் சிவந்தது.

அவள் சமாளித்துக் கொண்டாள்.

"தங்கம், நாளையிலிருந்து நான் வந்து உங்களைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். நீங்களாகப் புறப்பட்டு விடாதீர்கள்!" என்றுள்.

தங்கம் சரி என்றுள்.

தினமும் அந்த மூன்று பெண்களும் அந்த ராஜுவை தவருமல் வந்து வந்து பார்த்து விட்டுப் போனுர்கள். அத்தோடு, மலர்க்கொடியும் பலப்பல புதிய இடங்களுக்கு அவர்களைக்கூட்டிக் கொண்டு போய்க் காண்பித்தாள்.

ஒரு நாள் மலர்க்கொடி, "தங்கம், நீயும் கார் ஓட்டப் பழகிக் கொள்ளேன். சொந்தத்தில் ஒரு கார் வாங்கி வைத்துக் கொண்டால் மிகவும் பயனுக இருக்குமே!" என்ருள்.

"ஏன்? கார் வாங்கி ஒரு டிரைவர் சேர்த்து வைத்துக் கொண்டால் என்ன?' என்று ராதா குறுக்கே கேட்டாள்.

"குடும்பப் பெண்களைப் பொறுத்தவரை அது விரும்பத் தக்கதல்ல. குடும்பப் பெண்கள் தாங்களே தங்கள் காரை ஓட்டிக் கொண்டு போவதுதான் சிறந்தது' என்று மலர்க்கொடி பதில் சொன்னுள்.

தங்கம் தான் கார் ஓட்டப் பழக விரும்பவில்லை என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள் ஆனல், மலர்க்கொடி விடவேயில்லை. 'எப்படியாவது நீ காரோட்டப் பழகியே தீரவேண்டும்" என்று சொல்லியதோடு நில்லாமல் அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக உடன் வைத்துக் கொண்டு பழக்கிக் கொடுத்து விட்டாள். ஆள் நடமாட்டமில்லாத வீதிகளில் போகும் போது. தங்கத்தையும் ராதாவையும் மாற்றி மாற்றி ஓட்டச் செய்து நன்ருகப் பழக்கி லைசென்சும் வாங்கிக் கொடுத்து விட்டாள்.

இந்தச் செய்தியைக் கேட்டு கயிலாயம் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே யில்லை.

இதற்கிடையில், மருத்துவ விடுதியில் இருந்த ராஜுவும் பூரண குணமடைந்துவிட்டான். அவனை மருத்துவ விடுதியிலிருந்து அனுப்பும் நாளன்று, மலர்க்கொடி தன் தோழிமாருடன் அவனை அழைத்துச் செல்லச் கார் கொண்டுவந்திருந்தாள்.

மருத்துவ விடுதியிலிருந்து புறப்படும்போது, மலர்க்கொடி முன்னல் ஓட்டும் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள். ராதா அவளுக்குப் பக்கத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள் பின்னல் ராஜு உட்கார்ந்திருந்தான். கடைசியாகக் காரில் ஏறவந்த தங்கம், ராதாவை இடித்துக்கொண்டு முன் சீட்டிலேயே ஏறி உட்கார்ந்தாள்.

"நெருக்கமாக இருந்தால் எனக்குக் கை இடிக்கும். ஒருத்தி பின் சீட்டிலே போய் உட்காருங்கள்" என்றுள் மலர்க்கொடி. ஓரத்தில் இருந்தவள் தங்கம். அவள்தான் பின்னல் உட்காரவேண்டியிருந்தது அவளுக்கு மிகவும் வெட்கமாயிருந்தது. ஆனல், அவள் தான் பின்னல் போகவேண்டியிருந்தது.

சங்கடப் பட்டுக்கொண்டே அவள் பின்னல் போய் உட்கார்ந்தாள். ராஜு அவளுடன் மிகவும் மரியாதையாகப் பேசினுன். காரில் வருரபோதே அவன் ஏதேதோ சொல்லிக் கொண்டு வந்தான். அவையாவும் அவள் காதில் தேனுக ஓடியது. அவள் ஒருவிதமான மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்,

---

தலைமை நிலைய அறிக்கை (அ) 6/60

நிதி நிகழ்ச்சிகள்

1. கழகக் கிளை—கழகச் சார்பு மன்றங்கள்—கழகத் தோழர்கள்—கழக ஆதரவாளர்கள் ஆகியோர் சார்பில் நிதி திரட்டும் நோக்கத்துடன் சிறப்புக்கூட்டம், நாடகம், இசை, நடனம், திரைப்படம் போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதாக இருந்தால், கழகப் பிரச்சாரச் செயலாளர் அனுமதி பெற்ற பிறகே அவை நடத்தப் படுதல் வேண்டும்.
2. நிதி நிகழ்ச்சி எந்த ஊரில் நடைபெறுகிறதோ, அந்த ஊர்க் கிளையின் செயற்குழுவில் வைத்துத் தீர்மானம் மூலமாக நிறைவேற்றி மாவட்டச் செயலாளரின் ஒப்புதலுடன். விண்ணப்பத்தைக் கழகப் பிரச்சாரச் செயலாளரின் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
3. தலைமைக் கழகம் ஏற்பாடு செய்யும் நிதி நிகழ்ச்சிகளாக இருந்தால், அவற்றைச் சம்பந்தப்பட்ட மாவட்ட-வட்டக் கழகங்களின் செயலாளர்களுக்குத் தெரிவித்து, வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு தலைமைக் கழகம் அறிவிக்கும்.
4. நிதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் கழகச் சொற்பொழிவாளர்கள், கழகக் கலைஞர்கள் ஆகியோர், கழகப் பிரச்சாரச் செயலாளரிடம் அந்த நிகழ்ச்சிக்கான அனுமதி பெறப்பட்டதை அறிந்த பிறகே, கலந்துகொள்ள ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

'அறிவகம்', சென்னை-13.
28—10—60

இரா. நெடுஞ்செழியன்,
பிரச்சாரச் செயலாளர்.

பந்தல்

நாரா நாச்சியப்பன்.

கார் போகும்போது, வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு சிறுவன், பக்கத்தில் தன்னுடன் வந்து கொண்டிருந்த மற்ெருரு சிறுவனிடம் "இதோ பாரு, மாப்பிள்ளையும் பெண்ணும் ஊர்கோலம் போகுது" என்று அவர்களைச் சுட்டிக் காட்டினன். அது தங்கத்தின் காதில் விழுந்தது.

அந்தச் சிறுவனின் வாக்குப் பலிக்கக்கூடாதா! தன் இதயப் போராட்டங்களுக்கு ஒரு முடிவு உடனடியாக ஏற்படக் கூடாதா என்று அவள் மனம் ஏங்கியது. ஆனுல், மலர்க்கொடியைப் பார்க்கும்போதெல்லாம் தன் இதயக் கனவுகள் எதுவும் நிறைவேருது என்றே அவளுக்குத் தோன்றியது.

இப்படிப்பட்ட மனப் போராட்டங்களுடன் தன்னை மறந்திருந்த தங்கம், கார் ஒரு குலுங்குக் குலுங்கி நின்ற போது தன் நினைவு பெற்ருள். மலர்க்கொடியின் வீடுவந்து விட்டது.

எல்லோரும் இறங்கினர்கள் ராஜு அவனுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த அறைக்கு அழைத்துச் செல்லப் பட்டான். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து அவனை நலம் விசாரித்தார்கள் பிறகு தங்கமும் ராதாவும் ஜமீந்தார் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள்.

கடற்கரைக்கு உலாவப் போகலாம் என்று அழைத்துச் செல்வதற்காக தங்கத்தையும் ராதாவையும் தேடி ஒரு நாள் மலர்க்கொடி வந்தாள். தங்கத்துக்கு அன்று தடிமன் பிடித்திருந்ததாலும் இலேசாக மண்டை யுடைத்துக் கொண்டிருந்ததாலும் வரவில்லை என்று கூறிவிட்டாள். ராதாவும் மலர்க்கொடியும் மட்டும் சென்ருர்கள்.

அடுத்த நாளும் ராதாவும் மலர்க்கொடியும் மட்டுமே கடற்கரைக்குப் போயிருந்தார்கள். தங்கத்திற்குத் தடிமன் விடாததால் அன்றும் அவள் அவர்களுடன் போக வில்லை. தங்கம் மாளிகையின் முன்பகுதியில் உள்ள வராந்தாவில் வந்து அங்கு கிடந்த சாய்வுப் பிரம்பு நாற்காலியொன்றில் சாய்ந்து கொண்டு ஒரு கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே ஒரு சிறுவன் ஓடி வந்து. "ராதா அக்கா இருக்காங்களா ?" என்று கேட்டான்.

அந்தச் சிறுவனைப் பார்த்தால், வசதியான குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவனுகத் தோன்றியது

"ஏன் தம்பி ? என்ன வேண்டும் ?" என்று தங்கம் கேட்டாள்.

"இந்தாங்க, இதை உங்ககிட்டே கொடுத்திட்டு வரச்சொன்னுங்க" என்று! உறையிடப்பட்ட கடிதம் ஒன்றைக் கொடுத்தான் அந்தச் சிறுவன்.

"யார் கொடுத்தது ?" என்று தங்கம் கேட்டு முடிக்கும்போது அந்தச் சிறுவன் வீதியை அடைந்து விட்டான்.

கடிதத்தின் உறை ஒட்டப்பட்டிருந்தது. அதன் மேல் எதுவும் எழுதப் படவில்லை,

அந்தக் கடிதத்தைப் பார்க்கப் பார்க்க அதில் ஏதோ மர்மச் செய்தி அடங்கியிருப்பதுபோல் தோன்றியது. அதைப் பிரித்துப் பார்க்கவேண்டும் போல் இருந்தது. அதில் அப்படி என்ன எழுதியிருக்கும் யார் இப்படி இரகசியக் கடிதத்தை இராதாவுக்கு எழுதுவார்கள் என்றெல்லாம் தங்கத்தின் மனம் அலைபாய்ந்தது.

ஆனுல், தங்கம் கடைசிவரையிலும் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க வில்லை.

நினைத்திருந்தால் அவள் படித்துப் பார்த்திருக்கலாம். கடிதத்தின் உறையைக் கிழித்தெடுத்து படித்துவிட்டு மறுபடியும் ஓர் உறையில் ஒட்டி இராதாவிடம் கொடுத்திருக்கலாம். ஆனல் தங்கம் அப்படிச் செய்யக் கூடியவளல்ல.

கடற்கரையிலிருந்து இராதா திரும்பி வந்தவுடன், தங்கம் அவளைத் தனியே அழைத்து, கடிதத்தைக் கொடுத்து அது கிடைத்த விவரத்தையும் கூறினுள்.

கூறிவிட்டுத் தங்கம் வெளியில் வந்து விட்டாள்.

இராதா, வியப்புடன் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அந்தக் கடிதத்தைப் படிக்கும் போது அவள் நெஞ்சு படபடத்தது. அதைப் படித்து முடிந்ததும் அவள் தாங்க முடியாத துயருடன் பித்துப் பிடித்தவளைப்போல் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் அடைந்த வேதனையின் மிகுதி அவளை அழக்கூட விடவில்லை.

எவ்வளவு நேரம் அவள் இந்த நிலையில் இருந்தாள் என்பது அவளுக்கே தெரியவில்லை. ஆனுல், வெளியே காத்துக் கொண்டிருந்த தங்கத்திற்கு அவ்வளவு நேரமும் மிகப் பெரிய நூற்ருண்டு ஒன்று கழிவது போலத் தெரிந்தது. ஏதேனும் முக்கியமான அல்லது அதிசயமான அல்லது வியப்பான செய்தியாக இருந்தால் இராதா தன்னிடம் உடனே சொல்லி விடுவாள் என்பது தங்கத்துக்குத் தெரியும். ஆனுல், கடிதம் கொடுக்கப்பட்டதிலிருந்து அவளிடமிருந்து எவ்விதமான அழைப்பும் வராததோடு அவளும் வெளியே வராதது தங்கத்தின் ஆவலுணர்ச்சியை மேலும் தூண்டுவதாயிருந்தது.

ஆனுல், அழைக்கப் படாமல் உள்ளே நுழைய தங்கம் முற்படவே இல்லை. அழைப்பு வரட்டும் என்றே காத்திருந்தாள். கடைசியில் இரவுச் சாப்பாட்டு நேரம் வந்து ஜமீந்தாரிணியம்மாளும் மரகத அம்மாளும் அவர்களை உணவுண்ண அழைத்த பிறகு தான், தங்கம் இராதாவை அழைக்க அந்த அறைக்குள்ளே நுழைந்தாள்.

உள்ளே தலைநீட்டியவுடனேயே ராதா இருந்த நிலையைப் பார்த்து தங்கத்தின் உள்ளம் ஆட்டங் கண்டு விட்டது.

ராதா இருந்த நிலையைப் பார்க்க அவளால் பொறுக்க முடிய வில்லை. ஏதோ பிரமை பிடித்தவள் மாதிரி கண்களை அகலத் திறந்து கொண்டு உச்சித் தளத்தைப் பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் ராதா. அவள் கண்கள் அகன்றிருந்தனவே தவிர அவற்றிலே ஒளியில்லை. —எதிரில் வருவாரை அறியும் ஆற்றலை அவை இழந்திருந்தன.

தங்கம் ஓடிச் சென்று ராதாவைக் கட்டியணைத்துக் கொண்டு, "ராதா ராதா ? ஏன் இப்படியிருக்கிருய் ?" என்று பதை பதைப்பான குரலுடன் கேட்டாள்.

இராதாவின் காதில் அந்த வார்த்தைகள் விழவேயில்லை. அவள் பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்.

தங்கத்திற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

பயந்துபோய் "அம்மா ! அம்மா !" என்று கத்தினுள்.

மரகத அம்மாளும் ஜமீந்தாரிணியம்மாளும் விரைந்து வந்தார்கள்.

ராதா இருந்த நிலை அவர்களையும் கதிகுலையச் செய்தது.

டாக்டருக்கு உடனே ஆளனுப்பினர்கள்.

வீடு முழுவதும் ஒரே பரபரப்பாக இருந்தது.

அந்தப் பரபரப்பினிடையே தங்கம் ஒரு காரியம் செய்தாள்.

ராதாவுக்கு வந்த கடிதம் எங்கேயென்று தேடித் தரையில் ஒரு புறம் விழுந்து கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்துத் தன் இடுப்பிலே செருகி வைத்துக்கொண்டாள்.

டாக்டர் வந்து பார்த்து. ஏதோ மன அதிர்ச்சியின் காரணமாக ராதாவுக்கு இப்படி ஏற்பட்டிருக்கிறது என்றும், நேரம் ஆக ஆகச் சரியாகப் போய் விடும் என்றும் சொல்லி மருந்து கொடுத்துவிட்டுச் சென்ருர்.

இரவில் தன் அறைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்த தங்கம் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினுள்.

அந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபோது அவளுடைய உள்ளத்தில் பலமான போராட்டம் ஒன்று எழுந்தது. அந்தப் போராட்டம் நின்று அவள் ஒரு முடிவு காண்பதென்பது இயலாத காரியமாயிருந்தது.

இராதாவின் மன நிலைமையை அந்தக் கடிதம் மாற்றியது வியப்பிற்குரியதல்ல என்று அவள் நிச்சயித்துக் கொண்டாள்.

நிர்மூலமான ஜெர்மன் நகரங்கள் அழகு நகரங்களான விந்தை

(பீடர் கோடோவ்ஸ்கி)

யுத்தத்தின்போது நிர்மூலமான ஜெர்மன் நகரங்கள் இபபோது புத்துருப் பெற்று சுந்தர நகரங்களாக காட்சியளிக்கின்றன. இந்த அற்புதம் நிகழ்ந்தது எப்படி ?

ஜெர்மனியில் வீடுகள் கட்டித் தருவதற்கென்றே ஒருதனி நிறுவனம் இயங்குகிறது தொழிற் சங்கங்களே இதை நிர்வகித்து நடத்துகின்றன. லாபநோக்கமின்றி சேவையே முக்கியமாகக் கருதி இந்த நிறுவனம் செயல்படுகிறது.

ஹாம்பர்க் (டாட்)-ஜெர்மனியில் வீடுகள் கட்டித் தருவதற்கென்றே ஒரு மாபெரும் "கார்ப்பரேஷன்" மேற்கு ஜெர்மனியில் தொழிற் சங்க நிறுவனத்தின் மேற்பார்வையில் செயல்படுகிறது. மேற்கு சமஷ்டி குடியரசிலும், மேற்கு பெர்லினிலுமுள்ள 28 கம்பெனிகள் கொண்டதே இந்த நிறுவனம். இந்த நிறுவனம் லாப நோக்கத்துடன் நடத்தப்படுவது அல்ல. இந்த நிறுவனம் இவ்வாண்டு முடிவிற்குள் 1,00,000 குடியிருப்பு விடுதிகளைக் கட்டிமுடித்துவிடும். இவைகளில் 3,50,000 பேர் வசிக்கமுடியும்.

இப்போது மேற்கு ஜெர்மனியில் ஆண்டுக்கு 87 லட்சம் டாலர்கள், வீடுகள் கட்டும் திட்டம் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது யுத்தம் முடிந்ததிலிருந்து சமீப காலம்வரை சுமார் 50 லட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1953-ம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 5 லட்சம் வீடுகள் வீதம் கட்டப்பட்டு வந்தாலும் இன்னும் 15 லட்சம் வீடுகள் தேவையாகவே இருக்கிறது, இப்போதுள்ள வேலைத் திட்டப்படி 1965-க்குள் இப்பற்ருக்குறை தீர்க்கப்பட்டு விடலாம்.

வீடுகள் கட்டுவதில் புதிய முறைகள், சமீபத்தில் விஞ்ஞான வழியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிக்கன முறைகள் ஆகியவை கையாளப்படுகின்றன.

இந்த நிறுவனத்தைத் தோற்றுவித்தவர் புகழ்பெற்ற பாங்கி நிபுணரான பினெட் என்பவர். இந்த நிறுவனத்திற்கு அரசாங்க உதவி, தனிப்பட்டோர் முதலீடு, தொழில் துறையிலேயே கிடைக்கும் உதவி ஆகியவை கிடைக்கிறது. வீடுகளைக் கட்டிக்கொடுத்து தவணைகளில் பணம் பெற்று முடிவில் வீடுகளை அதில் குடியிருப்பவர்களுக்கே உரிமையாக்கும் திட்டம் மிக வெற்றிகரமாக, அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 20,000க்கு மேற்பட்ட வீடுகள் விற்கப்பட்டுள்ளன. 19 டாலர்கள் மாத வாடகைக்கு எல்லா வசதிகளையும் கொண்டு வீடு கிடைக்கிறது. 500 சதுர அடி பரப்புள்ள இடத்திற்கு சராசரி மாத வாடகை 15 டாலர்கள் தான்.

லாப நோக்கமின்றிச் செயல்படும் இந்த நிறுவனத்தின் சாதனை போற்றத்தக்கதேயாகும். (யுனிவர்சல் பிரஸ் சர்விஸ்)

சிறுகதை:

அவனும் அவளும் தினமும் கடற்கரையில் சந்தித்தார்கள்—சந்தித்து காதலை வளர்த்தார்கள். கடைசியில் அவன் பெற்ரேர் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். அன்று அவள் கடற்கரைக்குப்போன போது—அவன் பெண் பார்க்கப் போய்விட்டான். ஒப்புக்குப் பெண்ணைப்பார்த்து விட்டுப் பிடிக்கவில்லை என்று சொல்லி விடத்தான் எண்ணினுன். ஆனல், அவ்வாறு அவனுல் சொல்ல முடிந்ததா?

மறுத்து விடுவாரோ?

அன்புள்ள சிவகாமிக்கு,

இன்று மாலை என்னைக் கடற்கரையில் சந்திக்கவும், காத்திருப்பேன். ஏமாற்றிவிடாதே.

உன் அன்பு,
பரதன்.

இத்தோடு மூந்நூறு முறை படித்துவிட்டாள் சிவகாமி இந்தக் கடிதத்தை. பரதனைச சநதிப்பதென்ருல் அந்தப் பாவைக்கு எத்தனை மகிழ்ச்சி. இன்று சீக்கிரமாகவே வீட்டைவிட்டுக் கிளம்பிவிட வேண்டும் என்று அவள் வாய் முணுமுணுத்தது.

சிவகாமி!-அவளை அவள் அம்மா அழைத்தாள்.

'என்னம்மா?'

''இன்று மாலை உன் அத்தை வீட்டிற்குப் போக வேண்டும். கல்லூரியிலிருந்து சீக்கிரமாகவே வந்துவிடு''

சிவகாமிக்குப் பகீரென்றது. எப்படித் தட்டிக கழிப்பதென்று அவளுக்குப் புரியவில்லை.

'அம்மா!-குழைந்தாள் சிவகாமி'

'என்ன?'

'இன்றைக்கு......'

இன்றைக்கும் 6 மணிக்குத்தான் வீட்டுக்கு வருவாயா? தினமுமா 6 மணிவரை கல்லூரியில பாடஞ் சொல்லித் தாராங்க? என்ருள். சிவகாமிக்குப் பரதனைச் சந்திதுவிட்டு வரத்தான் தாமதமாகிறது எனபதை உணராத அவளுடைய அம்மா!

''ஆமாம்மா, படிப்புன்ஞ சும்மாவா கிடக்கு' என்று சமாளித்தாள சிவகாமி.

என்னமோம்மா நாளைக்காவது சீக்கிரம வந்துடு என்று கூறிவிட்டுச சென்றுவிட்டாள் சிவகாமியின் அம்மா.

'தப்பா! தப்பித்தோம்' என்றபடி பெருமூச்செறிந்தாள் சிவகாமி.

சிவகாமி!-இரண்டாவது பெருந் தடை அவளது அண்ணன் உருவில் வந்து கொண்டிருந்தது.

''என்னண்ணு!''

''ஒரு உதவி செய்வியா? சண்ணுல்லே மாட்டேங்காமே தயவு செய்து இதை மட்டும் செய் போதும்.''

''அட! எப்பப் பார்த்தாலும் உறண்டை இழுக்கிற அண்ணு இன்னைக்குத் தணிந்து பணிந்து பேசுருப்போலே இருக்கே! ஏன் இன்னைக்கு ஏதாவது தூது கீது போவணுமா?''

''சீசீ சும்மா சின்ன வேலைதான். நான் ஒரு புத்தகம் தர்றேன். அதை மீனுட்டே கொண்டே சாயந்தரம் கொடுத்துடணும, செய்வியா?''

''சரிதான் புத்தகக் காதலா?''

''என்ன'' என்று சொல்லியபடி சிவகாமியின் காதைத் திருகினுன் அவள் அண்ணு.

''ஐயோ! என்னண்ணு உன்னுடைய புத்தகத்திலே மீனுவுக்குக காதல்; மீனுவுடைய புத்தகத்திலே உனக்குக் காதல்ன்னு சொல்ல வந்தா...'

அதானே பார்த்தேன் என்று காதிலிருந்து கையை எடுத்தான் அவளுடைய அண்ணன். அது சரி. அப படியே பேசி என்னை ஏமாத்தி விடாதே. புத்தகத்தைக் கொடுத்துடுறியா? காரியததில் கண்ணுயிருந தான் சிவகாமியின அண்ணன.

அண்ணு! இன்னைக்கு அவளே இங்கே நமம வீட்டிறகு வர்றமின்ஞு. நேரே கொடுத்துடு என்று சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாகத் தோட்டத்திற்குத் தாவினுள் சிவகாமி. அங்கே மூன்ருவது தடை காத்திருக்குமென்று அவளுக்குத்தெரியுமா என்ன!

'சிவகாமி!'

'சிவகாமி! சிவகாமி!! இன்னைக்கு ஏன் தான் என்னை இப்படிக் கரித்துக் கொட்டுகிருர்களோ?' என்று வாய்க்குள் திட்டியபடி திருப்பிப் பார்த்த சிவகாமி நாக்கைக் கடித்துக்கொண்டாள். அங்கே அவளுடைய அப்பா நின்றுகொணடிருந்தார்.

''இன்றைக்குச் சாயந்திரம் உன்னை ஓரிடத்திற்குக் கூட்டிச் செல்லப் போகிறேன். எங்கே தெரியுமா?'' என்ருர் அவளுடைய அப்பா.

'எங்கேயாம் என்ருள்' ஈடுபாடு இல்லாமல் சிவகாமி.

'என்னம்மா சலிச்சுக்கிறே? இரண்டு நாளைக்கு முன்னுடி, அப்பா! ராயல் தியேட்டர்லே ஓர் ஆங்கிலப்படம் வந்திருக்கு அதுக்கு போவமான்னு கேட்டியல்ல. அதுக்கு இன்னைக்கு போவலாமான்னுதான் உன்னைக் கேட்கிறேன்' என்ருர்.

'அப்பா! நாளைக்குச் சிறு தேர்வு ஒன்றிருக்கு அதுக்குப் படிக்கணும் அதுனுலே இன்னெரு நாளைக்குப் போய்க்கலாம்' என்று படிப்பில் அக்கரையுள்ளவள்போல அவளுடைய தந்தையையும் சமாளித்தாள் சிவகாமி.

மணி 4-30 கிறித்தவப் பெண்கள் கல்லூரியை விட்டு அவசர அவசரமாக வெளியே வந்துகொண்டிருந்தாள் சிவகாமி. அவள் வந்த வேளைக்கும் அவளுக்குரிய பஸ் வரவேண்டிய வேளைக்கும் காலம் இணைந்திருந்தது. சிவகாமிக்கு அளவில்லா மகிழ்ச்சி. பஸ்ஸில் ஏறி அமர்ந்துகொண்டாள்.

'அம்மா! நீ இறங்க வேண்டிய இடம் வந்தாச்சு' என்று நினைவூட்டினுன் கண்டக்டர். அப்பொழுதுதான் அவ்வளவு நேரமும் வழித்துக்கொண்டே கனவு கண்டுகொண்டிருந்ததால் நினைவற்று விட்டோம் என்று உணர்ந்த சிவகாமி பஸ்ஸை விட்டு எலியட்ஸ் கடற்கரை நிலையத்தில் இறங்கினுள். அங்கிருந்து அவளும் பரதனும் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தை நோக்கி நடந்தாள். அந்த இடம் ஒரு தனி இடம். அங்கு கூட்டமே இருப்பதில்லை. அன்றும் கூட்டம் இல்லை. அங்கே ஒரு ஆள் உலவிக்கொண்டிருப்பதைக் கண்ட சிவகாமியின்இதழிலே நகை மின்னியது. ஏனெனில அந்த ஆள் பரதன்தான் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். அந்த இடத்திற்குச் சமீபத்தில் வந்ததுமே 'அத்தான்' என்ற சிவகாமி, 'மன்னிக்க வேண்டும் தவறுதலாக அழைத்து விட்டேன்' என்று அவள் குரல கேட்டுத் திரும்பிய அந்த ஆளிடம் ஏமாற்றத்தோடு வார்த்தைகளை உதிர்த்தாள். 'பரவாயில்லை! நீங்கள் தானே திருமதி சிவகாமி' என்று கேட்டான் அந்த ஆள். தன்னுடைய பெயர் இந்த ஆளுக்கு எப்படித் தெரிந்தது என்று வியப்போடும, அதே சமயத்தில் பயத்தோடும் ஆமாம் என்று ஒப்புக்கொண்டாள் சிவகாமி.

''இந்தாருங்கள் இந்தக் கடிதத்தை என் நண்பன் பரதன் தங்களிடம் கொடுக்கச் சொன்ஞன். என்று கடிதத்தைக் கொடுத்த அந்த ஆள் மறு விநாடி நான் வருகிறேன். என்று விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

சிவகாமிக்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. 'தாய், அண்ணன் தந்தை அத்தனை பேரையும் சமாளித்து இங்கு வந்தால் இப்படித் தன்னை ஏமாற்றிவிட்டாரே! வரட்டும் நாளைக்கும் இவளைச் சந்திக்கத்தானே வேண்டும் அப்பொழுது பேசிக் கொள்கிறேன்' என்று கருவிக் கொண்டே வேண்டா வெறுப்போடு கடிதத்தைப் பிரித்தாள் சிவகாமி.

அன்பே!

உன்னைச் சந்திக்க இயலாமைக்கு மன்னிக்கவும் யாரோ இந்தியன் வங்கி கணக்காளர் சண்முகசுந்தரம் என்பவரின் மகளைப் பெண் பார்க்கச் செல்ல வேண்டும் என்று என் அப்பா அழைத்தார். மறுத்தால் தவருக நினைப்பார் ஆகவே முறைக்காக வேனும் பார்த்துவிட்டுப் பிடிக்கவில்லை என்று மறுத்து விடுகிறேன். அதோடு நாளைக்கு அவளை உனக்குக் காண்பிக்கிறேன். ஏனெனில் அவளும் உன் கல்லூரியில் தான் படிக்கிருளாம்.

உன் அன்பு,
பரதன்.

கடிதத்தைப் படித்து முடித்த சிவகாமியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கவில்லை. இனிய புன்னகைதான் நெளிந்தோடியது.

''பெண்ணைப் பார்த்துவிட்டு வெண்டாமென்று சொல்வாராமே? எங்கே பார்க்கலாம். அந்தச் சண்முகசுந்திரத்தின் மகள் இந்தச் சிவகாமியைப் பார்த்துவிட்டு இவர் எப்படி வேண்டாமென்பார் பார்க்கலாம்!'' என்று தனக்குள்ளே பேசிக்கொண்டாள் சிவகாமி.

—இராம. கணபதி.

வாசகர்களுக்கு

தாள் பற்றுக்குறை காரணமாகத் தென்றல் இதழ்கள் சில வாரங்கள் வரை எட்டுப் பக்கங்களாகவே வெளிவர நேர்ந்திருக்கிறது. வாசகர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிருேம்,

இராம. கிருட்டிணன்,
உரிமையாளர்
தென்றல்

சித்திரவதை

இரா. தம்பி.

விடுதலைக்கு வித்திட்ட எண்ணற்ற வீரர்களின் வரலாறுகளைப் படித்திருப்பீர்கள். ஆனால் எனது வாழ்க்கை நீங்கள் நினைப்பதைப் போல நிச்சயமாக இருக்காது!

என் தலை நரைத்திருப்பதற்குக் காரணம்; அதிக வயதானதால் அல்ல! திடீர் பயத்தால் ஒரே இரவில் நரைத்ததும் அல்ல!

என் கால்கள் வளைந்திருப்பதற்குக் காரணம்; கடுமையான உழைப்பு அல்ல! சிறைச்சாலை என் சிங்கார எழிலைச் சிதைத்துவிட்டது!

என் தந்தை அரசியல் சுதந்திரத்திற்காகவும், மத சீர்திருத்தத்திற்காகவும் உழைத்தார்! ஓயாது உழைத்தார்! "விடுதலை! அதுதான் அவரது பேச்சும் மூச்சும்!

தாயக விடுதலைக்காகத் தளர்ந்த நிலையிலும் தயங்காது உழைத்தார்! அவர் சுட்டிக்காட்டிய பாதையில் நான் சென்றேன்! எனக்குக் கிடைத்த பரிசு சிறைச்சாலை!

தாயகம் தனி அரசு பெற உழைத்த என் தந்தையை மரத்தில் கட்டி வைத்துச் சுற்றி நெருப்பிட்டுக் கொளுத்திக் கொன்றார்கள் கொடும் பாவிகள்! அவரது மக்களாகிய எங்களையும் விடவில்லை அந்த மமதையாளர்கள்! தாக்கினார்கள்-தாங்கிக்கொண்டோம்! அல்லல் தந்தார்கள்!-அனுபவித்தோம்! இரக்கமற்ற அரக்கர்கள் எங்களை—மூவரை இருட்குகையில் அடைத்தார்கள்! அவர்களுள் உயிர் பிழைத்தவன் நான் ஒருவன்தான்!

எங்கள் வாழ்நாள் முழுதும் நாட்டு மக்களின் நலிவு நீக்குவதிலேயே செலவழிந்தது! தந்தையைக் கொளுத்திவிட்டனர் தருக்கர்கள்! அறப்போரிலே மூவர் கொல்லப்பட்டனர்! மற்றும் மூவர் சிறையில் அடைக்கப்பட்டனர் அவர்களில் நானும் ஒருவன்!

தாயகத்தைச் சுரண்டும் தருக்கர்களுடன் சேர்ந்து கைகட்டி வாய் பொத்திக் கிடந்தவர்கள் கணக்கற்றோர்!

கருத்தற்ற கபோதிகள்-கண்ணிருந்தும் காண மறுக்கும் கயவர்கள்-உரிமைக்குப் போரிடத் துணியாத கோழைகள்! மாற்றானிடம் மண்டியிட்டு விருதுகளும், விருந்துகளும், பதவியும், பணமும் கிடைத்தால் போதும் என்றிருந்த இனத் துரோகிகள்! படை பல பாய்ந்தாலும் பயப்படாது-எதிர்ப்புகளையும், எண்ணற்ற இன்னல்களையும்-அஞ்சாது அனுபவித்து, சிறையின் சித்ரவதைக்கும் துப்பாக்கிக் குண்டுக்கும் தூக்குக் கயிற்றின் ஊஞ்சலாட்டத்திற்கும் பயப்படாது விடுதலைப் போர் புரிந்த வீரர்களைக் கண்டு கேலி பேசினர்-ஏசல் கணைகள் தொடுத்தனர்! வாழத் தெரியாததுகள் என வசை மொழி பேசினர்!

இதயமற்ற இனத் துரோகிகளின் இறுமாப்புப் பேச்சை அலட்சியம் செய்தனர் இலட்சிய வீரர்கள்! சிங்கத்தை வீழ்த்தச் செல்லும் வீரர்கள் சிறுநரியின் சலசலப்புக்கா அஞ்சி நிற்பர்?

பாதாளத்தில் கட்டப்பட்டிருந்த குகைக்குள் கொண்டு சேர்த்தனர் எங்கள் மூவரையும்! ஏழு மிகப் பெரிய தூண்கள் அந்தக் குகையைத் தாங்கிக்கொண்டிருந்தன. பூமியில் நடக்கும் விநோதங்களைக் கண்டு களிக்கும் காய்கதிர்ச் செல்வனுக்கு அந்தச் சிறையினுள் என்ன வேலை! எங்கும் இருள்! ஒரே இருள்!

ஆனால். ஒரே ஒரு இரக்கமுள்ள சூரியக்கதிர் மட்டும் சிறையின் சுவரிலிருந்த சிறிய வெடிப்பின் வழியாக வந்து எட்டிப் பார்க்கும்! அந்தச் சுருங்கிய ஒளிதான் எங்களுக்குச் சூரியனின் முழு ஒளி! சிறையினுள் இருந்த ஒவ்வொரு தூணிலும் ஒரு வளையமும், ஒவ்வொரு வளையத்திலும் ஒரு சங்கிலியும் இணைக்கப்பட்டிருந்தது! அந்த இரும்புச் சங்கிலிகள் எங்கள் கால்களிலும் கைகளிலும் தழும்பை ஏற்படுத்திவிட்டன!

மூன்று தூண்களில் எங்கள் மூவரையும் கட்டிப் போட்டார்கள்எட்டிப் போகமுடியாது! அடி எடுத்து வைக்க முடியாது! நாங்கள் ஒருவரை யொருவர் பார்க்கமுடியாது! அவ்வளவு இருட்டு அந்தக் குகையில்! சில மணி நேரம் மங்கலான சூரியக்கதிர் வந்து எங்களைக் காணும் அந்த மங்கிய ஒளியில் நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்வோம்! எங்கள் உள்ளத்தில் ஒளி வீசிக்கொண்டுதான் இருந்தது! எங்கள் உடலைத்தான் கட்டிப் போட முடிந்ததே யொழிய உள்ளத்தில் உதித்த உன்னத இலட்சியத்தை-விடுதலை வேட்கையை அழிக்கமுடியவில்லை!

அந்த இருளிலும், நாங்கள் மூவரும் பேசிக்கொள்வோம்! நம்பிக்கை நசித்துப் போகாதிருக்க உற்சாகம் குறையாமலிருக்க-புது ஊக்கமுண்டாக்க-உரையாடினோம்! மக்கள் கரத்தின் வலிமையால் மாண்ட மமதையாளர்களின் வரலாறுகுறித்து விவாதித்தோம்!

"உரிமை தந்தவர்களைத் தொழும் கரம்தான் உரிமையைப் பறிப்போரின் கரம் அறுக்கக் கட்டாரி ஏந்தும்" என்ற உண்மையை உணர்ந்தோம்-உறுதி கொண்டோம்!

அவநம்பிக்கை எங்களை அண்டவில்லை! எங்கள் இலட்சியத்தின் மீது நாங்கள் கொண்டிருந்த உறுதியைக் குறைக்க முடியவில்லை கொடியவர்களால்! நாங்கள் வெற்றி காண்போம் என்று நம்பிக்கை எங்களுக்கு இருந்தது!

சிறை எங்கள் உருவை மாற்றியது! குரலை மாற்றியது! உறுதியை மாற்றவில்லை-மாற்ற முடியவில்லை!

எங்கள் மூவரில் நான்தான் மூத்த சகோதரன். கடைசி சகோதரன் காராக்கிரகத்தில் கடுந்துயரடைந்தது கண்டு கண்ணீர் விட்டேன். தந்தையால் அன்பாக வளர்க்கப்பட்டவன் அவன்! இன்னல் என்றால் இன்னதென்று அறியாது வளர்ந்தவன்! மகிழ்ச்சியின் மடியில் தவழ்ந்தவன்!

மற்றொரு சகோதரன் களங்கமில்லா இதயம் கொண்டவன். இயற்கைக் காட்சிகள் அவன் இதயத்தைக் கவர்ந்துவிடும். துள்ளி ஓடும் புள்ளி மான்களும், பாடிப் பறக்கும் பறவைகளும், அவன் ஆவலை அதிகமாகத் தூண்டிவிடும்! திரண்ட தோளும், அகன்ற மார்பும் உறுதியான உடலும் உடையவன்! மலைகளில் மனம் போனபடி வேட்டையாடுதல் அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். பழுத்த மரங்களை நாடிச் செல்வான் பசி போக்க! சுதந்திரமாகச் சுற்றி அலைந்தவனுக்கு சிறைச்சாலை பூஞ்சோலையாகத் தெரிந்தது! துன்பங்களைத் துணிவுடன் தாங்கிக்கொண்டான்! காரணம் இலட்சியம்-இலட்சிய வெறி!

சிறைச் சுவர்களுக்கு வெளியே எங்கும் தண்ணீர்! ஆயிரம் அடிக்கு மேல் ஆழமுள்ள அந்த ஏரியின் தண்ணீர் மட்டத்திற்குக் கீழ் அமைக்கப்பட்டிருந்தது அந்தக் குகை! தண்ணீரில் வாழும் உயிரினங்களின் ஓசை இரவும் பகலும் ஒலித்துக்கொண்டே இருக்கும்! பொங்கி எழுந்த தண்ணீர் சுவரின் உயரத்திலிருந்த சாளரத்தின் வாயிலாக உள்ளே வந்து விழும்!

எங்களுக்கு மிக மட்டமான உணவு கொடுக்கப்பட்டது! துள்ளி ஓடும் புள்ளி மான்களை வேட்டையாடி வீழ்த்தி விருந்துண்ட எனது சகோதரனுக்குச் சிறை உணவு பிடிக்குமா? சாரலில் சுற்றி அலைந்த ஆடுகளைப் பிடித்துப் பாலைக் கறந்து அருந்தி ஆனந்தமடைந்தவனுக்கு ஆற்றுத் தண்ணீர் கொடுக்கப்பட்டது அருந்துவதற்கு! கல்லைப்போல கடினமான ரொட்டியைத் தந்தார்கள். இவைகளில் எதையும் என் சகோதரன் தீண்டியதில்லை! உணவை உண்டு இறப்பதைக் காட்டிலும் உண்ணாமலே இறப்பது மேல் என எண்ணினான்!

அவனுடைய உடல் இளைத்தது! குரல் குறைந்தது! நம்பிக்கை கரைந்தது! நிற்கமுடியாத நிலை! கண்களை மூடிக்கொண்டான்! அவன் முகஒளி ஓடி ஒளிந்தது!

ஒருநாள், அவன் உயிர், உடலை விட்டுச் செல்லத் துடித்தது! அவன் பேசுவதற்கு வாயை அசைத்தான்! வார்த்தைகள் வெளிவரவில்லை! மங்கிய ஒளியில் நான் அவனைப் பார்த்தேன்! அவன் தலையையோ, துடிக்கும் கைகளையோ தொடக்கூட என்னால் முடியவில்லை! அவன் இதயக்குரல் இலேசாகக் கேட்டது! பின்னர் அமைதி! சுடுகாட்டு அமைதி நிலவியது அங்கே!

காவலர்கள் வந்து அவனைக் கட்டியிருந்த விலங்குகளை அவிழ்த்தனர் பின்னர் அவனைக் கட்டிவைத்திருந்த தூணுக்கருகில் ஒரு சிறு குழி தோண்டி அவனைப் புதைத்துவிட்டார்கள்.

என் கடைசிச் சகோதரன்-தந்தையின் அன்புக்குரியவன் அவனும் வாடினான்! பட்டுப்போன மலர், காம்பின்மீது நிற்பதைப்போல அவன் இருந்தான்!

கொடும்போரில் ஈட்டிக்கும் கூர் வாளுக்கும் இரையானவர்கள் துடிக்கும் துடிப்பையும், புயலில் சிக்குண்ட கப்பலிலிருந்து தண்ணீரில் தாவி, பிழைக்க வேண்டுமென்ற அவாவில் நீந்திச் சோர்வடைந்து, உணர்வற்று கைகளையும் கால்களையும் அடித்துக்கொண்டு தத்தளித்து உயிர்விட்ட பரிதாபத்திற்குரியவர்களையும் பார்த்திருக்கிறேன்! அவைகளெல்லாம் பயங்கரச் சாவுகள்தான்! ஆனால் எனது சகோதரன் அணுவணுவாகக் கொல்லப்பட்டான். சிறிது சிறிதாக அவன் சிந்தை நம்பிக்கை யிழந்தது. அந்த துயரககாட்சி என் கடைசிச் சகோதரனின் உறுதியையும் உருக்குலைத்துவிட்டது!

நாளுக்கு நாள் நலிவுற்றான்! ஆனால், அமைதியாகத்தான் இருந்தான்! அவனுடைய அழகிய கன்னங்களிலிருந்து சிவப்பு நிறம் சென்றுவிட்டது! மாநிற மேனி வெளுத்துவிட்டது! வானவில் மறைவதுபோல் அவனுடைய எழில் சிறிது சிறிதாக மறைந்தது! என்னை ஊக்கப்படுத்த முன்பெல்லாம் பேசுவான்! பாடுவான்! நான் கேட்பேன்! ஆனால் இப்போது?

அவனால் பேச முடியவில்லை! குரல் குன்றிவிட்டது! நான் அவனைக் கூப்பிட்டேன்! பதில் இல்லை! மீண்டும் கூப்பிட்டேன்! மீண்டும் பதில் இல்லை! நான் திடுக்கிட்டேன்! மிகவும் சத்தமாகக் கூப்பிடடேன். இலேசான சப்தம் கேட்டது! பின்னர் அமைதி!

என் இதயத்தில் எழுந்த பயம் என்னை அமைதியாக இருக்க விடவில்லை! மீண்டும் அழைத்தேன்! சிறு சப்தம் கேட்டது. பின்னர் அமைதி!

சிங்கம் சீறிக் கிளம்புவதைப்போல் வீறிட்டுக் கிளம்பினேன்! என்னைத் தடுத்திருந்த விலங்குகள் தெறித்து விழுந்தன. தடை தரை மட்டமாக்கப்பட்டது! படையையும் எதிர்க்கும் பலம் பெற்றேன்! ஓடிச் சென்று அவனைக் கண்டேன்! அவன் ஆவி அவனை விட்டு ஓடிவிட்டது! கண்ணிலிருந்து ஒளி பிரிக்கப்பட்டதைப் போல், நகமும் சதையும் பிரிக்கப்பட்டதைப்போல் என்னிடமிருந்து அவன் எடுத்தெறியப்பட்டான்! நிலவற்ற மேகமானேன்!

எனக்கும் வாழ்க்கையின் ஓரத்திற்கும் இருந்த தொடர்பு அன்றே அற்றுப் போனதுபோல் தோன்றிற்று!

ஆசையூட்டியவர்களை அன்பு காட்டியவர்களை இழந்துவிட்டால்-அவர்களை அழைக்கமுடியாது என்ற உணர்ச்சி எழும்போது பைத்தியம் பிடித்துவிடும்போலத் தோன்றும். என் நிலையும் அப்படித்தான்!

சிறையிலிருந்த கற்களினூடே நானும் ஒரு கல்லாய் நின்றேன். எங்கிருந்தோ வந்த அந்த இசை என் சிந்தையைத் தொட்டது! எந்த மனிதனும் கேட்டிருக்க முடியாத அவ்வளவு இனிமை! தென்றல்போல் தவழ்ந்து வந்து தேன்போல் இனிமை தந்தது!

என் சிந்தை குளிர்ந்தது! ஆச்சரியத்தால் என் கண்கள் அங்குமிங்கும் பார்த்தன! நான் ஒரு சிறைக் கைதி என்ற உணர்வு என்னிடம் இல்லை! சுவர் வழியாக உள்ளே வந்த சூரிய ஒளியைப் பார்த்தேன்! அந்த ஒளி வந்த பிளவு வழியாகப்பாடிய அழகுப் பறவையைப் பார்த்தேன்! அதன் இசை என் இதயத்தில் இனிய கருத்துக்களை-புதிய எண்ணங்களைத் தோற்றுவித்தது! எல்லாம் உனக்காகத்தான், என்று அந்தப் பறவை சொல்லுவதுபோலத் தோன்றியது! அதனுடைய அன்பைக் காட்ட வந்திருக்கும் என உணர்ந்தேன்! ஆனால் கடைசியில் பறந்துவிட்டது! என் தனிமை இரட்டிப்பானது.

என் வாழ்க்கையில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. என்னவெனில், காவலர்கள் என்மீது இரக்கங் காட்டினர்! கட்டுப்பாடுகள் தளர்ந்தன! கண்ணியம் காட்டப்பட்டது! அதற்கு காரணம் மட்டும் எனக்குத் தெரியாது! சிறைக்குள் உலவ அனுமதி அளிக்கப்பட்டது! ஆனால், நான் தப்பிச் செல்ல விரும்பவில்லை!

என்னை நேசித்தவர்கள் எல்லாம் இறந்துவிட்டார்கள்! எனக்குத் தாய் இல்லை! தகப்பன் இல்லை! உடன் பிறந்தோர் இல்லை! உறவினர் இல்லை! மனைவி இல்லை! மக்கள் இல்லை! என் துன்பத்தில் பங்குபெற எவருமே இல்லை! நாடு விடுதலை பெற்றதால் எனக்கு விடுதலை கிடைத்தது!

சிறைச்சாலை என்ன செய்யும்? மனம் தளராதவர்களை தன்னம்பிக்கையுள்ளவர்களை-கொள்கை உறுதி படைத்தவர்களை-சிறையின் சித்ரவதை சிதைத்துவிடாது! எழுச்சி மிக்கவர்களின் புகழ் அங்குதான் அதிக ஒளி வீசும்! விடுதலை வேட்கை கொண்ட வீரர்களை வீணர்களால் அடக்கமுடியாது! புகையும் எரிமலை ஒருநாள் வெடித்தே தீரும்! அது போல விலங்கிடப்பட்ட உள்ளத்திற்கு விலங்கை உடைத்தெறிந்து வீரமுழக்கமிடும் வெற்றிநாள் வராமல் போகாது.

[பைரனின் ஆங்கிலக் கவிதையைத் தழுவியது]

வெண்பாப் போட்டி

வஞ்சனை யாளர் வடக்கு

வங்கக் கடல்கிழக்கு, வர்ரு மலைவளத்தால்
பொங்கும் அரபிக் கடல்மேற்கு- பைங்கிளியே
கொஞ்சுதமிழ் நாட்டின் குமரிதெற்கு, தொல்லைதரும்
வஞ்சனை யாளர் வடக்கு.

— பொன்னன், ஆர்காடு.

போடுகின்ற திட்டமெலாம் போட்டு வடபுலத்துக்
காடெல்லாம் பொன்மலரும் காவாக்கிக் கேடுகெட்டுப்
பஞ்சேபோல் நம்மைப் பறக்கவிட்டோர் வாழிடந்தான்
வஞ்சனை யாளர் வடக்கு.

— துரை-இராசன், திருச்சி.

நோய்நொடியால் மாண்டால் நுவலுபவர் யாருமில்லை !
தாய்நாடு வாழ்க !இல்லை சாவிலுயிர்- தோய்க !என
வெஞ்சமரில் நாம்புகுந்தால் வேரோடு சாயாதோ
வஞ்சனை யாளர் வடக்கு.

— அர. தமிழன், திருச்சி.

கொட்டும் வரிப்பணத்தால் கூடி மகிழ்கின்றார்
திட்டமெலாம் அங்கேதான் ! தென்னகத்தை- விட்டுவிட்டார்
நஞ்செண்ணம் கொண்டு நமையாளும் நேர்மையற்ற
வஞ்சனை யாளர் வடக்கு.

— ப. குருதேவன், தேவதானப்பட்டி.

துன்ப நிலைநீங்க தூயோர் புகழ்கின்ற
"இன்பத் திராவிடம்" இங்கமைந்தால்- தென்னவர்பால்
தஞ்ச மடைவதல்லால் தன்னாட்சி காணுமோ
வஞ்சனை யாளர் வடக்கு.

— தி. இர. வெங்கடேசன், சிந்தாதிரிப்பேட்டை.

நீதியில்லா ஆட்சிக்கும் நேர்மையில்லா மக்களுக்கும்
ஓதரிய கற்புணரா உன்மத்தர்- காதைக்கும்
நெஞ்சார ஓரஞ்செய் நேருவுக்கும் ஓர்திக்கு
வஞ்சனை யாளர் வடக்கு.

— இரத்தினசனார்த்தனன், தாம்பரம்.

கொஞ்சு தமிழ்நாட்டுக் கோர்குறை உற்றதென்றால்
அஞ்சிச் செயல்படவோ ஆளில்லை ?- மிஞ்சும்நம்
நெஞ்ச நெகிழ்ச்சிதனை நீக்க முயலாதவ்
வஞ்சனை யாளர் வடக்கு.

— "செஞ்சடையன்," திருக்கழுக்குன்றம்.

தென்னாட்டின் செல்வமெலாஞ் சேர்த்துடில்லி யில்குவித்தே
அந்நாட்டைப் பூக்காடாய் ஆக்குவதும்- இந்நாட்டில்
மிஞ்சும் தொழில்களையும் வேரறுத்து மாய்ப்பதுவும்
வஞ்சனை யாளர் வடக்கு.

— செல்லம், கோவை.

துஞ்சும் தமிழரினம் துள்ளி எழுந்துடனே
அஞ்சாமல் தும்பை அணிந்திட்டால்- மிஞ்சிடுமோ ?
வெஞ்சமரில் சேரமன்னன் வீழ்த்திடவே கல்சுமந்த
வஞ்சனை யாளர் வடக்கு.

— ஏ. சிவானந்தன், வாத்தலைக்காடு.

மானமெனும் பண்பு மறைந்ததோ ? மாற்றார்க்குத்
தானமென உன்னறிவைத் தந்தாயோ ?- ஈனமுறத்
துஞ்சுந் தமிழ்மகனே ! தூங்காதே ஓங்குதடா
வஞ்சனை யாளர் வடக்கு.

— ந. இராசேசுவரி, திருமணி.

பைந்தமிழின் தூய்மை; பழுத்ததனிப் பண்புடைமை
மைந்துடைமை யாவும் மயக்கமுற்று- நைந்தொழிய
நஞ்சு மொழியால் நலங்கெடுப்ப தெல்லாம்தீ
வஞ்சனை யாளர் வடக்கு.

— மரு. பரமகுரு, காரைக்குடி.

தென்னகத்து வீரம் தெரியார்; அகம்புறம்
என்னென் றறியார்; திருவிடத்தைக்- கன்னம்செய்
நெஞ்சராய்க் காக்கின்றார்; "நாம்இந்து" எனச்சொல்வார்
வஞ்சனை யாளர் வடக்கு.

— மோ. கு மன்னார், மோகூர்.

நெஞ்சுடையப் பாடுபட்ட நீர்மையார் தென்னாட்டில்
பஞ்சடைந்த கண்ணுப் பரிதவிக்க- அஞ்சாமல்
மிஞ்சிய செல்வத்தை மேவிச் செழிக்குதடா
வஞ்சனை யாளர் வடக்கு,

— கி. ச. அருளப்பன், மலையடிப்பட்டி.

அஞ்சாத் தமிழ்வீரர் ஆர்த்தெழுந்தால், நாட்டினிலே
பஞ்சம் பறந்தோடும் ! பைந்தமிழின் சீர்பரவும் !
எஞ்சா வளங்கள் எழில்காட்டும் !- தூளாகும்,
வஞ்சனை யாளர் வடக்கு.

— பனை. பழநியப்பன், மேலைச்சிவபுரி.

நாடாண்ட தென்னவர்கள் நாதியற்று வாழ்விழந்(து)
ஓடாகி நாளும் உழைத்தாலும்- வாடாமல்
நெஞ்சில் இரக்கமின்றி நித்தம் வதைக்கின்றார் !
வஞ்சனை யாளர் வடக்கு.

— ம. சண்முகம், சித்தையன்கோட்டை,

தெற்கு வறண்டதேன் ? தீக்காடாய்ப் போனதேன் ?
குற்றுயிராய் வாழ்வு குலைந்ததேன் ?- பொற்றொடியே !
அஞ்சாமல் கூறிடுவேன் அத்தனைக்கும் காரணந்தான்
வஞ்சனை யாளர் வடக்கு.

— பி. கோ. கோவிந்தராசன், ஆமதாபாத்.

"நல்ல பசும்பாலில் நஞ்சே கலப்பதுபோல்
வெல்லக் குழம்புறைந்த வேம்பினைப்போல்- பொல்லாத
நஞ்சுமொழி இந்தியினை நந்தமிழில் சேர்க்குதையோ
வஞ்சனை யாளர் வடக்கு.

— மு. அ. கருப்பையா, புதுக்கோட்டை.

அஞ்சா மறத்தமிழர் ஆண்ட பரம்பரைதான்
எஞ்சிய நம்தமிழர் ஏதமிலா- வஞ்சியரே !
கொஞ்சுமிளஞ் செந்தமிழின் கொள்கைதனைக் கண்டலறும்
வஞ்சனை யாளர் வடக்கு.

— பொன்னன், ஆர்க்காடு.

ஆனை படுத்தால் அதன்உயரம் சிற்றுயிராம்
பூனை யளவுக்கும் புன்மையோ- வானகத்தை.
மிஞ்சுபுகழ்ச் செந்தமிழர் வீறுகொண்டால் எஞ்சுமோ
வஞ்சனை யாளர் வடக்கு.

— அருப்புக்கோட்டை. மா. ச. இராமசாமி.

சஞ்சிக்கும் சந்தைக்கும் கண்கலங்கித் தெற்கிருக்க
நெஞ்சுவரை தின்று நிமிர்தொந்தி- பஞ்சணையில்
துஞ்சவே கண்ணயரும் தூர்த்தர் வளர்திசையாம்
வஞ்சனை யாளர் வடக்கு.

— அர. இராசாராமன், வளவனூர்.

பஞ்சத்தால் பஞ்சாய்ப் பறந்து பரிதவித்துக்
கஞ்சியின்றிக் கண்ணீர் வடித்துநாம்- துஞ்சிட !
பஞ்சணையில் சாய்ந்துகொண்டு பன்னீரில் வாய்கழுவும்
வஞ்சனை யாளர் வடக்கு.

— பெ. இராசேந்திரன், மருதங்குடி.

முத்து மணிபிறக்க, முப்பால் கடல்சிறக்க
கொத்துக் கதிர்பெருக்கும் கோயிலிது !- அத்தனையும்
கொஞ்சிக் குலவிப்பின் கொண்டுவிட்டார் ! செந்தமிழா !
வஞ்சனை யாளர் வடக்கு.

— முத்துதாசன், தஞ்சை.

பாத்துணவை தட்டிற் படைத்திடுவாள் என்றெண்ணி
முத்தாள் மகனங்கே முன்னிருக்க;- மீத்தாமல்,
கொஞ்சித்தன் சேய்க்கே கொடுத்திட்ட பெண்போலும்
வஞ்சனை யாளர் வடக்கு.

— ஆதிராஜன், காஞ்சிபுரம்.

நீதியில்லை ஆட்சி நெறியில்லை மானமில்லை
வீதியில் வாழ்வோர் மிகவுண்டு- பீதியுண்டு
பஞ்சம் பசியைப் பயிர்செய்து பாராளும்
வஞ்சனை யாளர் வடக்கு.

— பெ, சூ. மாணிக்கர், அலங்காநல்லூர்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.